செய்திப் பணிப்பாளர் /செய்தி ஆசிரியர் 21.05.2018

# செய்தி வெளியீடு

## தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(அடிப்படை 2013=100) : ஏப்றல் 2018


**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**

**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு**

தொலைபேசி: 011-2147414 தொலைநகல்: 011-2877945 மின்னஞ்சல் prices@statistics.gov.lk


2018 ஏப்றல் மாதத்திற்கான தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) பற்றிய அறிக்கையை வெளியிடுகையில் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சதரசிங்க அவர்கள், தே.நு.வி.சு.அடிப்படையான வருடத்தின் மீது வருட பணவீக்கமானது 2018 மார்ச் மாதத்தில் 2.8% இருந்து 1.6% ஆக குறைவடைந்துள்ளது என தெரிவித்தார். 2018 ஏப்றல் மாதத்தில் பதிவாகிய 1.6% பணவீக்கமே, 2016 பெப்ருவரி மாதத்திலிருந்து இதுவரையில் பதிவாகிய ஆகக்குறைந்த பணவீக்கமாகும். 2018 ஏப்றல் மாதத்தில் உணவு மற்றும் உணவல்லாப் பிரிவுகளிலிருந்து பணவீக்கத்திற்கான பங்களிப்புகள் முறையே -0.2%, 1.7% ஆக இருந்த அதேவேளை, 8.4% முதன்மைப் பணவீக்கத்தின் பெறுபேறாக 2017 ஏப்றல் மாதத்தில் பணவீக்கத்திற்கான இந்த இரு பிரிவுகளிலினதும் பங்களிப்புகள் முறையே 5.2%, 3.3% ஆக காணப்பட்டன.

இருப்பினும், தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்(தே.நு.வி.சு.) மாதம் மீது மாத மாற்றங்களை ஒப்பிடுகையில் 2018 மார்ச் மாதத்தில் பதிவாகிய 122.8 இருந்து 2018 ஏப்றல் மாதத்தில் 122.9 ஆக அதிகரித்துள்ளது. இது, 2018 மார்ச் மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஏப்றல் மாதத்தில் 0.1 சுட்டெண் புள்ளி அதாவது 0.1 சதவீதப் புள்ளி அதிகரிப்பொன்றைக் காட்டுகிறது. இந்த மாதம் மீது மாத மாற்றத்திற்கான காரணம், உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.12% ஆல் அதிகரித்தமையும், உணவுப்பொருட்களின் செலவுப் பெறுமதி 0.11% ஆல் குறைவடைந்தமையுமாகும்.

உணவுப்பொருட்களின் குறைந்த செலவுப் பெறுமதியானது மரக்கறி, பெரிய வெங்காயம், தேங்காய், முட்டை, கடலை, அரிசி மற்றும் பச்சை மிளகாய் என்பன பொருட்டு பதிவாகின. எனினும், உணவுப்பொருட்களின் அதிகரித்த செலவுப் பெறுமதியானது எலுமிச்சம்பழம், உருளைக்கிழங்கு, தேயிலைத் தூள், வாழைப்பழம், கோழி இறைச்சி, புதிய மீன், செத்தல் மிளகாய் மற்றும் குழந்தைப் பால்மா என்பன பொருட்டு பதிவாகின.

முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2018 ஏப்றல் மாதத்தில் உணவல்லாப்பொருட்களின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘அற்ககோல் பானங்கள், புகையிலை மற்றும் தியக்கமருந்துகள்’, ‘ஆடையும் காலணியும்’, ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’, ‘தளபாடம், குடித்தன உபகரணம் மற்றும் வழமையான குடித்தன பராமரிப்பு’ மற்றும் ‘போக்குவரத்து’ ஆகிய பிரிவுகளில் ஏற்பட்ட செலவுப் பெறுமதியின் அதிகரிப்பேயாகும். ‘வீடமைப்பு, நீர், மின்வலு, எரிவாயு, ஏனைய எரிபொருள்கள்’ பிரிவின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், ‘போக்குவரத்து’ பிரிவின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், 2018 ஏப்றல் 28ஆம் திகதியிலிருந்து எல்.பி.எரிவாயுவின் விலை அதிகரிக்கப்பட்டமையேயாகும். அத்துடன், ‘போக்குவரத்து’ பிரிவின் செலவுப் பெறுமதியின் அதிகரிப்புக்குக் காரணம், 2018 மார்ச் மாதத்திலிருந்து எரிபொருளின் விலை அதிகரிக்கப்பட்டமையுமாகும். மேலும், முந்திய மாதத்துடன் ஒப்பிடுகையில் ‘நானாவிதப் பொருட்களும் சேவைகளும்’ பிரிவு செலவுப் பெறுமதியில் ஓரளவு சற்று அதிகரிப்பு பதிவாகியது. அதேநேரம், ‘சுகாதாரம்’, ‘தொடர்பாடல்’, ‘பொழுதுபோக்கும் கலாசாரமும்’, ‘கல்வி’ மற்றும் ‘உணவகமும் ஹோட்டல்களும்’ ஆகிய பிரிவுகளிலுள்ள பொருட்களின் விலைகள் இம்மாதத்தில் மாற்றமின்றி காணப்பட்டன.




தே.நு.வி.சு. இன் அசைவுகள் (அடிப்படை : 2013 = 100)

| வருடம் | மாதம் | சுட்டெண் | சுட்டெண்ணிற்கான மாதத்திற்கு மாதம் % மாற்றம் | புள்ளிக்கு புள்ளி பணவீக்க% |
|---|---|---|---|---|
| **2017** | ஏப்ரல் | 121.0 | 1.3 | 8.4 |
| | மே | 121.8 | 0.7 | 7.1 |
| | யூன் | 123.4 | 1.3 | 6.3 |
| | யூலை | 122.4 | -0.8 | 6.3 |
| | ஓகஸ்ட் | 122.3 | -0.1 | 7.9 |
| | செப்ரெம்பர் | 123.3 | 0.8 | 8.6 |
| | ஒக்ரோபர் | 124.8 | 1.2 | 8.8 |
| | நவம்பர் | 126.4 | 1.3 | 8.4 |
| | டிசம்பர் | 126.6 | 0.2 | 7.3 |
| **2018** | ஜனவரி | 125.8 | -0.6 | 5.4 |
| | பெப்ரவரி | 123.7 | -1.7 | 3.2 |
| | மார்ச் | 122.8 | -0.7 | 2.8 |
| | ஏப்ரல் | 122.9 | 0.1 | 1.6 |

தொகைமதிப்பு, புள்ளிவிபரத் திணைக்களம்